**பொருள் எண்.1**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் தேர்வு செய்யப்பட்டுள்ள 24 இடங்களில் தானியங்கும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழுங்கல் மையங்கள் அமைப்பதற்காக அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில் நுட்ப நுணுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவனங்களை தேர்வு செய்வதற்கு ஏதுவாக 17.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரி, Expression of Interest (EOI) விளம்பரம் செய்யப்பட்டதில்.,M/s.Aqua Engineers and Consultants India Pvt. Ltd., Chennai நிறுவனத்திடமிருந்து மட்டும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அதன் தொழில் நுட்ப உறை 17.12.2018 அன்று ஆணையரால் திறக்கப்பட்டு, Bid Evaluation செய்யப்பட்டதில் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதை தொடர்ந்து 02.01.2019 அன்று Price Bid திறக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு,

| Sl. No | Description | Rate to be remitted in Municipality (Rs./20 litres) | Rate to be changed for sale to public (Rs./20 litres) | Rate to be changed for sale to public from chilling Machine |
|---|---|---|---|---|
| | Est.of 1000 litres/hr capacity community drinking water system through reverse Osmosis with UV treatment in Colachel Municipality under PPP mode | Rs.1/- (Plant site) & Rs.2/- (Door site) | Rs.7/- (Plant site) & Rs.20/- (Door Delivery) | Rs.1-/(per litre) |

GST for the above will be extra as applicable

மேற்காணும் விலை நிரக்கின் அடிப்படையில், 24 வார்டுகளில் தேர்வு செய்யப்பட்டுள்ள 24 இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட தானியங்கும் குடிநீர் வழங்கும் மையங்கள் அமைக்க M/s.Aqua Engineers and Consultants India Pvt.ltd., Chennai நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டுதல் நெறிமுறைகளுக்கு உட்பட்டு அளிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1477/2018/இ1

**தீர்மானம் எண்.1979 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.2**

இந்நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் பகுதி உரக்கிடங்கில் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் பசுமை வேலை அமைத்தல் பணியினை மேற்கொள்வதற்கு, 27.12.2018 அன்று குறுகிய கால மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு விவரம் |
|---|---|---|
| 1 | திரு.சி.செல்லநாடார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.04% குறைவு |
| 2 | திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட12.10% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.செல்லநாடார், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.04% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.358/2015/இ1

**தீர்மானம் எண்.1980 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.3**

இந்நகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள குடிநீர் வினியோக வால்வு பிட்டுகளில் பக்க சுவர் மற்றும் மேல்மூடி அமைத்தல் பணியினை ரூ.2,20,000/– மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு, மன்றத் தீர்மானம் எண்.1930 நாள் 31.10.2018–ன் படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு, அதன் அடிப்படையில் 05.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு விவரம் |
|---|---|---|
| 1 | திரு.சி.தேவராஜ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.08% குறைவு |
| 2 | திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட1.65% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.தேவராஜ், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.08% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1114–1/2018/இ1

**தீர்மானம் எண்.1981 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.1**

குளச்சல் நகராட்சி உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள குப்பைகளை Bio-Mining முறையயில் ரூ.146.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள Swacchh Bharath Mission (SBM) 8th State High Powered Committee (SHPC) - ன் கூட்ட நடவடிக்கைகள் நாள் 19.12.2018 ஒப்புதல் அளிக்கப்பட்டு, இப்பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்.1191/2019/பி3 நாள் 21.01.2019–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, பின்வரும் நிதி பங்களிப்பின் படி மேற்கொள்ள ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

| GOI share | State Share | ULB Share | Total Estimated Amount (Rs.in Lakh) |
|---|---|---|---|
| 35 % | 55 % | 10 % | 146.00 (100 %) |

மேற்காணும் நிதி ஒதுக்கீட்டு விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

மேலும் நகராட்சி பஙகளிப்பை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.566–2/2018/இ1

**தீர்மானம் எண்.1982 அஙகீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.2**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.38984/2014/பி1 நாள் 11.01.2019–ல் Swachh Bharath Mission (SBM)- 8th State High powered Committee (SHPC) - ன் 19.12.2018–ம் தேதிய கூட்ட நடவடிக்கையின் படி, இந்நகராட்சியில், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை முழுமையாக செயல்படுத்துவதற்கு, மின்கலத்தில் இயஙகும் வாகனஙகள் வாஙகுவதற்கு ரூ.21.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.1191/பி3/2019 நாள் 21.01.2019–ன் படி நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீட்டு விவரம் பின்வருமாறு,

| Nature of Work | Name of Work | Estimated Amount (Rs in lakh) | Funding Pattern | | |
|---|---|---|---|---|---|
| Procrument of Primary CollectionVehicles | Purchase of Battery operated Vehicles as per Specification (12 Nos.) | 21.60 | GOI Share 35 % | State Share 55 % | ULB Share 10 % |

மேற்படி திட்ட நிதி ஒதுக்கீட்டு விவரத்தை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

மேலும் மேற்காணும் வாகனஙகளை கொள்முதல் செய்வதற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.566–4/2018/இ1

**தீர்மானம் எண்.1983 அஙகீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.3**

நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை ந.க.எண்.7366/2016/UPA2 நாள் 03.09.2018–ன் படி வரப்பெற்றுள்ள சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுஙகுமுறை துணை விதிகள் 2018–னை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் ஆன செலவுத் தொகை ரூ.4663.50–னை ஆணையாளர் நாகர்கோவில் நகராட்சி பெயரில் காசோலையாக அனுப்புவதற்கு நகர்மன்றத்தின் அஙகீகாரத்திற்கு வைக்கப்பட்டுள்ளது.

ந.க.எண்.5156/2009/TPI

**தீர்மானம் எண்.1984 அஙகீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.4**

நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13052/2016/டி2 நாள் 11.07.2017–ல் அரசு/ அரசு துறை சார்ந்த கணக்கு எண்.3051,3054 மற்றும் 3131–ல் இடம் பெற்றுள்ள நீண்ட கால முன்பண நிலுவைகளை (Write off) தள்ளுபடி செய்திட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, இந்நகராட்சியில் கீழ்க்கண்டவாறு 1967–68முதல் 2002–03 முடிய உள்ள பதிவுகளில் இடம் பெற்றுள்ள அலுவலக பயன்பாட்டிற்கு சிமெண்ட், தார்,மின்பொருட்கள், எழுது பொருட்கள் வாங்கிட முன்பணமாக வழங்கப்பட்டு, கணக்கு எண்.3051–ல் ரூ.30,548/–, கணக்கு எண்.3054–ல் ரூ.66965/– மற்றும் கணக்கு எண்.3131–ல் ரூ.2051534.74/– ஆக மொத்த தொகை ரூ.2149048/– ஐ செலவின கணக்கிற்கு கொண்டு சென்று முன்பணத் தொகை ஈடு செய்ய மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

| வ. எண் | வருடம் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | 1967–68 | இயக்குநர், எழுது பொருள் துறை | 121.00 |
| 2 | 1970–71 | இயக்குநர், எழுது பொருள் துறை | 77.00 |
| 3 | 1971–72 | அரசு மருத்துவமனை, பிளீச்சிங பவுடர் | 79.00 |
| 4 | 1982–83 | ஸ்டார் கம்பெனி | 384.00 |
| 5 | 1988–89 | பாரத் பெட்ரோலியம் சப்ளை | 47.00 |
| 6 | 1999–00 | சிமெண்ட் வினியோகம் | 29840.00 |
| | | **மொத்தம்** | **30548.00** |
| 7 | 1989–90 | தார் இறக்கு கூலி | 60.00 |
| 8 | 1991–92 | டுபிட்கோ | 433.00 |
| 9 | 1993–94 | Transfer to Fixed LCS | 4000.00 |
| 10 | 1997–98 | PWD Department | 2000.00 |
| 11 | 1997–98 | சிமெண்ட் இறக்கு கூலி | 374.00 |
| 12 | 1997–98 | பொது நிதியிலிருந்து LCS | 6883.00 |
| 13 | 1997–98 | கணக்கு மாற்றம் | 43466.00 |
| 14 | 1998–99 | பொது நிதியிலிருந்து மாற்றம் | 1613.00 |
| 15 | 1998–99 | ஊதியம் | 2000.00 |
| 16 | 1999–00 | சிமெண்ட் இறக்கு கூலி | 285.00 |
| 17 | 1999–00 | சிமெண்ட் இறக்கு கூலி | 569.00 |
| 18 | 1999–00 | சிமெண்ட் இறக்கு கூலி | 282.00 |
| 19 | 1999–00 | ஜெஸ்பி பதிவேடு | 500.00 |
| 20 | 2000–01 | பசுமை திட்டம் | 500.00 |
| 21 | 2002–03 | பொது நிதியிலிருந்து சத்துணவு மையம் | 4000.00 |
| | | **மொத்தம்** | **66965.00** |
| 22 | 1984–85 | TWAD, Chennai | 100000.00 |
| 23 | 1985–86 | TWAD, Chennai | 3509.74 |
| 24 | 1985–86 | TWAD, Chennai | 5000.00 |
| 25 | 1985–86 | TWAD, Chennai | 18000.00 |
| 26 | 1985–86 | TWAD, Chennai | 8000.00 |
| 27 | 1986–87 | TWAD, Chennai | 15000.00 |
| 28 | 1986–87 | TWAD, Chennai | 75000.00 |
| 29 | 1987–88 | TWAD, Chennai | 200000.00 |

| | | | |
|---|---|---|---|
| 30 | 1987–88 | TWAD, Chennai | 500000.00 |
| 31 | 1987–88 | TWAD, Chennai | 3750.00 |
| 32 | 1988–89 | TWAD, Chennai | 8450.00 |
| 33 | 1988–89 | TWAD, Chennai | 8100.00 |
| 34 | 1988–89 | TWAD, Chennai | 8725.00 |
| 35 | 1989–90 | TWAD, Chennai | 300000.00 |
| 36 | 1989–90 | TWAD, Chennai | 405000.00 |
| 37 | 1989–90 | TWAD, Chennai | 50000.00 |
| 38 | 1989–90 | TWAD, Chennai | 543000.00 |
| | | மொத்தம் | **2051534.74** |
| | | ஆக மொத்தம் | **2149047.74** |

ந.க.எண்.80/2018/பி1

**தீர்மானம் எண்.1985 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.5**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 24 வார்டுகளிலும் சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்களை செலுத்த கோரி ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்ய உத்தேச செலவு தொகை ரூ.25000/–க்கு மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.4826/2012/அ1

**தீர்மானம் எண்.1986 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.6**

இந்நகராட்சிக்குட்பட்ட உரக்கிடஙகில் பிரித்து வைக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் கழிவுகளை மறு சுழற்சி செய்ய எடுத்து செல்லவும், இதற்கு மேல் சேகரமாகும் விலைப்போக நெகிழி கழிவுகளை தரம் பிரித்து திரு.ஜி.செல்வகுமார், ஆசாரிப்பள்ளம் அவர்களிடம் கொடுப்பதற்கும் அதற்கு அவர் வாஙகும் கையாளும் தொகை (Handling charges) துப்புரவு தொழிலாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் துப்புரவு பணியாளர்களுக்கு பிரித்து வழஙகவும் மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1360/2017/எச்1

**தீர்மானம் எண்.1987 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.7**

இந்நகராட்சியில், Faecal Management and Septage Management திட்டம் : 2018–19–ன் கீழ், ரூ.548.35 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ள பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவிலான தமிழ் (தினபூமி நாளிதழ்) மற்றும் ஆஙகில (Deccan Chronicle) பத்திரிக்கைகளின் 07.12.2018–ம் தேதிய பதிப்பில் வெளியிட்ட வகையில்

விளம்பர கட்டணம் ரூ.**93,346/–**ஐ வழஙக கேட்டு M/s.Mark Media, Chennai நிறுவனத்திடமிருந்து பட்டியல் எண்.**76**, நாள் **07.12.2018** வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙகவும், திட்டநிதி பெறப்பட்ட பின்னர் விளம்பர கட்டணத்திற்கான தொகையினை நகராட்சி பொது நிதியில் வரவாக்கம் செய்யவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.566–1/2018/இ1

**தீர்மானம் எண்.1988 அஙகீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.8**

இந்நகராட்சிக்கு உட்பட்ட சிஙகன்காவு குறுக்கு தெருவில் தெரு விளக்குகள் இல்லாததால் இரவில் முழு இருட்டாக உள்ளதாலும், மக்கள் நடமாட்டத்திற்கு கஷ்டமாக உள்ளதால் புதியதாக மின் விளக்குகுள் அமைத்து தருமாறு பொது மக்கள் கோரியதன் அடிப்படையில் இடம் பார்வையிட்டு ஏற்கனவே உள்ள **13** எண்ணம் மின்கம்பஙகளில் **12** எண்ணம் பின்கம்பஙகளில் மின்விளக்குகள் அமைக்க மதிப்பீட்டு கட்டணம் தெரிவிக்க கோரி தமிழ்நாடு மின்வாரியம், குளச்சல் அவர்களுக்கு கடிதம் எழுதவும் அதற்கான தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்துவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.4378/2010/இ1

**தீர்மானம் எண்.1989 அஙகீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.9**

குழித்துறை ஆறு கூட்டு குடிநீர் திட்டத்திலிருந்து குளச்சல் நகராட்சிக்கு குடிநீர் வழஙகும் பொருட்டு மேற்படி திட்டத்திலிருந்து நாள் ஒன்றிற்கு **6** இலட்சம் லிட்டர் குடிநீரை பெறுவதற்கு, ஆலஞ்சி கிராமத்திலிருந்து குளச்சல் வரை குடிநீர் குழாய்களை நீட்டித்து குடிநீர் வழஙககேட்டு மன்றத் தீர்மானம் எண்.**1843**, நாள் **27.06.2018**–ன் படி, மன்ற ஒப்புதல் பெறப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (RWS Division) நாகர்கோவில் அலுவலகம் மூலம் ரூ.**56.06** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையருக்கு முன் மொழிவு சமர்ப்பிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், **3rd Empowered Committee for Capital Grant Fund and O&M Gap Filling Fund :2018-19-ன் 01.10.2018 –**ஆம் தேதிய கூட்ட நடவடிக்கையில், குழித்துறை ஆறு கூட்டு குடிநீர் வழஙகும் திட்டத்தை குளச்சல் வரை விரிவாக்கம் செய்வதற்கு திட்ட நிதி ஒதுக்கீடு ரூ.**53.08** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு குடிநீர் வாரியமும் மேற்படி 6.00 இலட்சம் லிட்டர் குடிநீர் குளச்சல் நகராட்சிக்கு வழஙகுவதற்கு ஒப்புதல் தெரிவித்து மேற்படி கூட்டு குடிநீர் திட்டத்தில் குழித்துறை சாலையில் உள்ள பிரதான குழாயில் ஆலஞ்சி முதல் குளச்சல் வரை 200mm PVC குடிநீர் குழாய் பதித்து 55000 லிட்டர் கொள்ளளவு தரைமட்ட நீர்த்தேக்கதொட்டி மற்றும் நீரேற்றும் நிலையம் அமைத்து நகராட்சியில் உள்ள 7.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு மேல்நிலைநீர்தேக்க தொட்டியில் நீர் ஏற்றும் வகையில் ரூ.53.08 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மூலதன மானியம் நிதி

மற்றும் இயக்குதல் மற்றும் பராமரித்தல் நிதி : 2018–19–ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை (1) –ல் குறிப்பிட்டுள்ள 3rd Empowered Committee குழு கூட்டத்தில்ஒப்புதல்வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது மேற்படி பணிக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்குவதற்கு ரூ.53.08 இலட்சத்திற்கு மதிப்பீடு சமா்ப்பிக்கப்பட்டதில், நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளா் அவா்கள் மேற்படி மதிப்பீட்டை ஆய்வு செய்யப்பட்டதில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பைப்புகொள் முதல் கொள்கை குழு கூட்ட நடவடிக்கை ஒப்புதல் படி பி.வி.சி குடிநீர் பிரதானகுழாய் பதிக்க ஒப்புதல் மறுக்கப்பட்டு DI-K7 பைப்பு மூலம் பிரதானகுடிநீர் குழாய் பதிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதால், அதன்படி மேற்படி பணிக்கு 200mm அளவுDI-K7 குழாய் பயன்படுத்தி பணிகள் மேற்கொள்ள ரூ.115.00 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் கீழ்காணும் விவரப்படி திட்டநிதி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| Sl. No | Name of the ULB | Sector | Amount (Rs.in Lakh) | Grant already allotted (Rs.in lakh) | Grant to be allotted in 2018-19 (Rs.in lakh) | Reason for works taken up |
|---|---|---|---|---|---|---|
| 1 | Colachel | WSIS | 115.00 | 53.08 | 62.00 | Extending Kuzhithuraiyaru CWSS due to intrusion of salt in borewells during Tsunami |

**மேற்படிவிவரம் மன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.**

மேலும், குழித்துறை ஆறு கூட்டு குடிநீர் வழங்கும் திட்டத்திலிருந்து குளச்சல் நகராட்சிக்கு குடிநீர் வழங்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் அனுமதி பெறுவதற்கும், மேற்காணும் ரூ.115.00 இலட்சம் மதிப்பீட்டிலான பணிகளை மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்க கேட்டு நகராட்சி நிர்வாக ஆணையருக்கு விரிவான திட்ட அறிக்கை சமா்ப்பிக்கவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண். 870–1 /2018/இ1

**தீர்மானம் எண்.1990 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.1**

குழித்துறை ஆறு கூட்டு குடிநீர் திட்டத்திலிருந்து குளச்சல் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் பொருட்டு மேற்படிதிட்டத்திலிருந்து நாள் ஒன்றிற்கு 6 இலட்சம் லிட்டர் குடிநீரை பெறுவதற்கு, ஆலஞ்சி கிராமத்திலிருந்து குளச்சல் வரை குடிநீர் குழாய்களை நீட்டித்து குடிநீர் வழங்க கேட்டு மன்றத் தீர்மானம் எண்.1843, நாள் 27.06.2018–ன் படி, மன்ற ஒப்புதல் பெறப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (RWS Division) நாகர்கோவில் அலுவலகம் மூலம் ரூ.56.06 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையருக்கு முன்மொழிவு சமா்ப்பிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், **3rd Empowered Committee for Capital Grant Fund**

**and O&M Gap Filling Fund 2018-19-ன் 01.10.2018** –ஆம் தேதிய கூட்ட நடவடிக்கையில், குழித்துறை ஆறு இணைப்பு குடிநீர் வழங்கும் திட்டத்தை குளச்சல் வரை விரிவாக்கம் செய்வதற்கு திட்டநிதி ஒதுக்கீடு ரூ.**53.08** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடுகுடிநீர் வாரியமும் மேற்படி 6.00 இலட்சம் லிட்டர் குடிநீர் குளச்சல் நகராட்சிக்கு வழங்குவதற்கு ஒப்புதல் தெரிவித்து மேற்படி கூட்டு குடிநீர் திட்டத்தில் குழித்துறை சாலையில் உள்ள பிரதான குழாயில் ஆலஞ்சி முதல் குளச்சல் வரை 200mm PVC குடிநீர் குழாய் பதித்து 55000 லிட்டர் கொள்ளளவு தரை மட்ட நீர்த்தேக்க தொட்டி மற்றும் நீரேற்றும் நிலையம் அமைத்து நகராட்சியில் உள்ள 7.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு மேல்நிலைநீர்தேக்க தொட்டியில் நீர் ஏற்றும் வகையில் ரூ.53.08 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மூலதன மானியம் நிதி மற்றும் இயக்குதல் மற்றும் பராமரித்தல் நிதி: 2018–19–ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை (1)–ல் குறிப்பிட்டுள்ள 3rd Empowered Committee குழு கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது மேற்படி பணிக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்குவதற்கு ரூ.**53.08** இலட்சத்திற்கு மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டதில். நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்கள் மேற்படி மதிப்பீட்டை ஆய்வு செய்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பைப்பு கொள்முதல் கொள்கை குழு கூட்ட நடவடிக்கை ஒப்புதல் படி பி.வி.சிகுடிநீர் பிரதான குழாய் பதிக்க ஒப்புதல் மறுக்கப்பட்டு DI-K7 பைப்பு மூலம் பிரதான குடிநீர் குழாய் பதிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதால், அதன்படி மேற்படி பணிக்கு **200**mm அளவுDI-K7 குழாய் பயன்படுத்தி பணிகள் மேற்கொள்ள ரூ.**115.00** இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் கீழ்காணும் விவரப்படி திட்டநிதி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| **Sl. No** | **Name of the ULB** | **Sector** | **Amount (Rs.in Lakh)** | **Grant already allotted (Rs.in lakh)** | **Grant to be allotted in 2018-19 (Rs.in lakh)** | **Reason for works taken up** |
|---|---|---|---|---|---|---|
| 1 | Colachel | WSIS | 115.00 | 53.08 | 62.00 | Extending Kuzhithuraiyaru CWSS due to intrusion of salt in borewells during Tsunami |

மேற்படி விவரம் மன்றத்தால் தீர்மானம் எண்: 1990 நாள்:22.01.2019 – ன் படி, பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், Capital Grant Fund and O &M Gap Filling Fund:2018-19 – ல் முழு மானியமாக திருத்திய திட்ட மதிப்பீட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்து நகராட்சி நிர்வாக ஆணையரின் செயல்முறைகள்ந.க எண். நாள் – ன் படி, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், மேற்காணும் ரூ.**115.00** இலட்சம் மதிப்பீட்டிலான பணிகளுக்கு நகராட்சி

நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளரின் தொழில்நுட்ப அனுமதிபெற்று பணிகளை மேற்கொள்வதற்கு மன்றஅனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண். 870–1 /2018/இ1

**தீர்மானம் எண்.1991 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.2**

இந்நகராட்சியில் Faecal Sludge and Septage Management Scheme : 2018-19 - ன் கீழ் ரூ. 548.35 இலட்சம் மதிப்பீட்டில் Establishment of Faecal Sludge & Septage Management Treatment Plant at Compost Yard of 40 KLD Capacity in Colachel Municipality பணியினை மேற்கொள்வதற்கு SBM & IUDM Fund 2018-19 –ன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து நகராட்சி நிர்வாக ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.26888/UGSS-2/2018 நாள் 12.11.2018–ன் படி நிர்வாக அனுமதி வழஙகப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு கடந்த 11.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இரண்டு எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அவற்றின் தொழில் நுட்ப உறை 11.01.2019 அன்று வருகை புரிந்த ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி குழு உறுப்பினர்காளல் திறக்கப்பட்டு, அவற்றின் Technical Bid Evaluation செய்யப்பட்டதில், திரு.D.ஜெஸ்டின் சுந்தர் சிங ஆத்திமூடு, ஒப்பந்ததாரர் தொழில் நுட்ப தகுதி பெற்றதை தொடர்ந்து, 22.01.2019 அன்று Price bid உறை திறக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.D.ஜெஸ்டின் சுந்தர் சிங,<br>ஒப்பந்ததாரர்,<br>ஆத்திமூடு,<br>மண்டைக்காடு அஞ்சல். | மதிப்பீட்டை விட 1 %<br>குறைவு |

எனவே, திட்டப்பணிகள் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும், ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டுள்ளதாலும் திரு.D.ஜெஸ்டின் சுந்தர் சிங, ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 1 % குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை ஏற்று Letter of Acceptance (LOA) வழஙக மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.566–1/2018/இ1

**தீர்மானம் எண்.1992 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.1**

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் அமைந்துள்ள நவீன மீன்சந்தை தரைதளம் கடை எண்.7 ஐ திரு.S.ரிபாய்கான என்பவர் மாதவாடகைக்கு 01.07.2017–ல் எடுத்துள்ளார். மேற்படி கடையை 2019 ஜனவரியில் ஒப்படைப்பு செய்து கடைக்கான நிலுவைத்தொகை ரூ.2,19,480/–ஐ முன்வைப்புத் தொகை ரூ.1,50,000/–லிருந்து ஈடு

செய்யவும் பாக்கியுள்ள தொகையை செலுத்தவும் சம்மதம் தெரிவித்துள்ளார். எனவே கடையின் வரிவிதிப்பு எண்.148/2017005/–ன் உரிமத்தை 2019 ஜனவரி முதல் ரத்து செய்யவும் மற்றும் கடையை மறு ஏலம் விடவும் மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2035/2015/அ1

**தீர்மானம் எண்.1993 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.2**

இந்நகராட்சிக்கு சொந்தமான ரேஷன் கடைக்கு 30.11.2017–டன் உரிமம் முடிவடைந்துள்ளதால் மேலும் 01.10.2017 முதல் 30.11.2020 வரை மேலும் மூன்றாண்டு கடைகளுக்கு வாடகை தொகையில் 15% வரி உயர்வு செய்ய மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

| வ.எண் | வரிவிதிப்பு எண் | வாடகைதாரர் பெயர் | தற்போதைய வாடகை | 15% வரி உயர்வு செய்த வாடகை | வரி உயர்வு செய்யப்பட்ட பின்னர் வாடகை |
|---|---|---|---|---|---|
| 1 | 148/2014002 | ரேஷன் கடை | 1500/- | 225/- | 1725/- |

ந.க.எண்.2035/2015/அ1

**தீர்மானம் எண்.1994 அங்கீகரிக்கப்பட்டன.**